# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS .No.298/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திரு. செந்தில்கண்ணன் | ஊர் | : | உப்புகாச்சிபேட்டை |
| த.பெ. | : | திரு.ராமலிங்கம் | மாவட்டம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 52 | தொழில் | : | **வேலை ஏதுமில்லை** |

2026ம் ஆண்டு திங்கள் பிப்ரவரி-16ஆம் நாள் **வா.சா. 1 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u>

சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1ஆம் பிரதிவாதி எனது தம்பி பெயரிலுள்ள கணினி பட்டா தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.1** ஆகும். புல எண் 18/1எ, 18/2எ, 19/4, 19/5, 19/6எ,72/1, 73/2, 19/3 ஆகிய எண்களுக்கான சொத்து தொடர்பாக வில்லங்க சான்று தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.2** ஆகும். எனது அப்பா பெயரிலுள்ள புல எண் 73/1க்கான பட்டா நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.3** ஆகும்.

முதல்விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோள்படி ஒத்திவைக்கப்படுகிறது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.16 17:00:10 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**